
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1150

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

53

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.




ஓவியம் : சிகரன்

# கட்டுப்பாடுகளைக் கடமையாக ஏற்ற கிராமம்!

திருவாதிரைமங்கலத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக, விவசாயப் பிரச்சினைகள் மட்டுமல்லாது, பகுத்தறிவுச் சிந்தனைகளை நோக்கியும் ஊர்மக்களின் கவனம் திரும்பியது. கோயில் திருவிழாக்களைத் தவிர்க்கத் தொடங்கினர். தீபாவளி கொண்டாடும் வழக்கத்தைக் கைவிட்டனர். பட்டாசு வெடித்தால் அபராதம் விதிக்கப்பட்டது. ஜோசியம் பார்க்கக்கூடாது, குறி சொல்ல ஊருக்குள் வர எவருக்கும் அனுமதி இல்லை. வேண்டுதல் என்ற பெயரில், மொட்டை அடிக்கக்கூடாது. ஊர் எல்லையிலேயே இந்தக் கட்டுப்பாடுகளை எழுதி, பதாகை வைக்கப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் ஊர் மக்கள் கட்டுப்பாடாக அல்ல, கடமையாகக் கருதி அப்படியே பின்பற்றினார்கள்.

இன்னொருபுறம், பெரியார் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் திருவாதிரை மங்கலம் மக்கள் தவறாமல் பங்கெடுத்தனர். 1973-இல் பெரியார் மறைந்தபோது, லாரி நிரம்ப ஆட்கள் சென்னை வருகைதந்து, ராஜாஜி அரங்கில் பெரியாருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அடுத்த ஆண்டே பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் ஏற்பாடு செய்த ராவண லீலாவுக்கும் திருவாதிரைமங்கலத்தில் இருந்து மட்டும் ஒரு தனி லாரி புறப்பட்டது. 1980-களில் அருகே உள்ள உக்கூர் கிராமத்தில் பெரியார் சிலையை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சேதப்படுத்தியுள்ளார். அந்த நபரையே வரவைத்து சிலையைச் சரிசெய்ய வேண்டுமென்று ஒட்டுமொத்த திருவாதிரைமங்கலம் மக்களும் சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல் துறைக்கும் நெருக்கடிகள் முற்றவே, சிலையைச் சேதப்படுத்திய நபரே பயந்துபோய், தன் செயலுக்கு வருந்தி சிலையைச் சரிசெய்து கொடுத்தார்.

கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்த அந்த ஊரில்தான் திருவாதிரைமங்கலம் சிவலோகநாதசுவாமி கோயிலும் உள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் நடமாட்டமே இல்லாமல், சிதிலமடைந்து கைவிடப்பட்ட நிலையில் இக்கோயில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புதான் மீண்டும் புனரமைத்து வழிபடத் தொடங்கியுள்ளனர். எனினும், இப்போதும் திருவாதிரைமங்கலத்தைச் சேர்ந்த மக்கள் செல்வது மிகச் சொற்பம்தான். ஏனெனில், இன்றும் அங்கு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் திராவிட இயக்க உணர்வோடு பின்னிப்பிணைந்த குடும்பங்களே. அதன் காரணமாகவே ஊருக்குள் இப்போது சாதி ஆதிக்கமோ, மற்றெந்த ஆதிக்கமோ நடைமுறையில் இல்லை.

...பயணம் தொடரும்



என்னுடைய சிறுவயதில் விவசாயம் தொடர்பாக, நாகை பாட்சாவை சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது, நிகழ்ச்சிக்காக பெரியார் அங்கு வந்திருந்த நிலையில், என்னையும் அழைத்துச் சென்றார். அன்றைக்கு பெரியார் பேசியதைக் கேட்டு ஈர்ப்பு ஏற்பட்டு, பிறகு சுற்றுவட்டார கிராமங்களுக்கு பெரியார் எப்போது வந்தாலும் பார்க்கச் சென்றுவிடுவேன். என் பள்ளிக்காலத்திலேயே 16 முறை அப்படி பார்த்துவிட்டேன். பெரியார் ஒருவரால்தான் எங்கள் ஊரில் சாதி ஆதிக்கம் ஒழிந்து கல்வி, வேலைவாய்ப்பில் மக்கள் முன்னேற்றம் கண்டனர்.

- ராஜேந்திரன், திராவிடர் கழகம்.

திருவாதிரைமங்கலத்தின் வாய்க்காலுக்கு அப்பால் உள்ள இரும்புக்கால் பகுதியில், 1959-இல் பெரியார் பங்கேற்ற பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரியாரிடம் தங்கள் குழந்தைக்குப் பெயர் வைக்கச்சொல்லி பலர் வரிசையில் நின்றனர். காலணா, எட்டணா வாங்கிக்கொண்டு அன்னக்கிளி, திராவிடமணி, காமராஜ் எனப் பெரியார் பெயர் சூட்டியுள்ளார். ‘காசு உள்ளவர்கள் மட்டும் வாங்க’ என்று கூறிய பெரியார் கடைசியில், ‘காசு இல்லாதவங்க வாங்க’ என்று அவர்களையும் அழைத்து, குழந்தைகளுக்குப் பெயர் வைத்துள்ளார்.

## போரை நிறுத்த ஒரே வழி!

மத்திய கிழக்கு நாடுகளில் நீடிக்கும் போர் பதற்றம் இன்னும் முடிவுக்கு வராத நிலையில், ஈரானில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என நினைத்தால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது, ‘ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைதி ஒப்பந்தம் செய்ய வேண்டும்’ எனத் தனது கருத்தைப் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் முத்துகிருஷ்ணன்.

அவரது பதிவில், ‘ஒரு தேன்கூட்டை இரு முட்டாள்கள் கலைக்க, அது அவர்களை மட்டுமல்ல, அவர்களுக்குச் சாமரம் வீசிக்கொண்டிருந்தவர்களை, அவர்களுடன் மேடையில் நின்றவர்கள் அனைவரையும் முகமெல்லாம் கொட்டி வைத்துவிட்டது. ஈரானின் அணு தொடர்பான திட்டங்களை, ‘கடந்த ஆண்டே அழித்துவிட்டோம், இப்போது முதல் நாளிலேயே அவர்களின் தலைமையைக் காலி செய்துவிட்டோம்’ என விதவிதமான அறிக்கைகளை வைத்து உலகை ஏமாற்ற முடியாது.

ஈரானின் பாதுகாப்புத் திறன்களை அழித்துவிட்டதாக அறிவிக்கும்போதே கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால், அங்கே மேலே ஈரானின் ஏவுகணைகள் பறந்துகொண்டு இருக்கின்றன. உலக பத்திரிகையாளர்கள் குபீர் சிரிப்பில் ஒருவரை ஒருவர் பார்த்து சிரிக்கிறார்கள். ஈரான், ஹோர்முஸ் நீரிணையின் கட்டுப்பாட்டையும் வைத்திருப்பதால், உலகளாவிய பொருளாதாரச் செலவுகள் அதிகரித்து வரும் இந்தப் போரிலிருந்து, டிரம்ப் விலக முடியாத நிலை உருவாகியுள்ளது. வளைகுடா பகுதியில், அமைதி திரும்ப வேண்டும் எனில் ஒரே ஒரு வழிதான் உள்ளது, ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைதி ஒப்பந்தம் செய்ய வேண்டும். அதன் சரத்துகளை எல்லாம் கச்சிதமாகப் பின்பற்றுவதில் மட்டுமே உள்ளது” என்கிறது அந்தப் பதிவு.

அதே சமயம், ஈரான் மீதான டிரம்ப்பின் தாக்குதலை 61 சதவிகிதம் அமெரிக்கர்கள் ஏற்கவில்லை என ஐப்சோஸ் ஆய்வு கூறுகிறது. போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவில் பெட்ரோல் விலை கணிசமாக அதிகரித்துவருவதும், மக்களை அதிருப்தியடையச் செய்துள்ளது. அதனால், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி போரைக் கைவிட வேண்டுமென்ற எண்ணம் அமெரிக்கர்கள் மத்தியிலும் மேலோங்கிவருகிறது. அதுதான் உலகின் மனநிலையும் என்பதை அமெரிக்கா உணர வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### உணர்வுகளைப் புரிந்துகொண்ட தம்பி!



இளையபாரதி

1986-ஆம் ஆண்டிலிருந்து, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். 2006-ஆம் ஆண்டில், அவரது கதையில் ‘பாசக்கிளிகள்’ படத்தில் வேலை பார்க்கும்போது, தினமும் பத்திலிருந்து பன்னிரண்டு மணி நேரம் அவருடன் சேர்ந்து பணியாற்றினேன். அந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய கலைஞர், “இந்தத் திரைப்படத்திற்காக என்று இல்லாமல், சுமார் இருபது ஆண்டுகளாக, எப்போதும் என் உணர்வுகளைப் புரிந்துகொண்ட தம்பி, இளையபாரதி” எனப் பாராட்டினார். கோபாலபுரம் வீட்டில் நூல்கள் அடுக்கின் பின்னணியில் எடுக்கப்பட்ட இந்தப் படம், என்றும் ஈர நினைவுகளைக் கொண்டது.

- கவிஞர் இளையபாரதி,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

103

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# டெல்லியின் அடிமையும் கழகத்தின் அணுகுமுறையும்...

**‘நான் டெல்லிக்குப் போனாலே முதலமைச்சருக்கு பயம் வந்துவிடுகிறது’ என்று சொல்லியிருக்கிற எடப்பாடி பழனிசாமி, தி.மு.க. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கூட்டணி குறித்தும் விமர்சித்திருக்கிறாரே?**

எடப்பாடி பழனிசாமி ஒவ்வொரு முறையும் தனக்கு ஏற்படும் பயத்தினால்தான் டெல்லிக்கு அடித்துப்பிடித்து ஓடுகிறார். எதற்காக அங்கே செல்கிறார்? என்கிற உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியாமல், பொய்யான காரணங்களை ஊடகங்களிடம் சொல்லிவிட்டு, டெல்லியில் கார் மாறி, கார் மாறி அமித்ஷாவின் காலடியைத் தேடிப் போவதை வழக்கமாக வைத்திருக்கிறார். பயத்துடனும் பவ்யத்துடனும் அவர் டெல்லிக்குப் போனது அமித்ஷாவை சந்திக்கத்தான் என்ற உண்மை அம்பலப்பட்டதும், ஊடகங்களிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், கர்ச்சீப்பால் முகத்தை மூடிக்கொண்டு வெளியேறியவர் அவர்தான். கூட்டணிக்குத் தலைமைதாங்குவது அ.தி.மு.க.தான் என்று சொல்லிவிட்டு, ஒவ்வொரு முடிவுக்கும் டெல்லியின் கட்டளைப்படியும், டெல்லிக்கு ஓடிச்சென்றும் செயல்படுவதுமாக உள்ள பழனிசாமிக்கு, தி.மு.க. தலைமையில் 2019 முதல் தொடர்கின்ற கொள்கைவழிக் கூட்டணி குறித்துப் பேசுவதற்கு எந்தத் தகுதியுமில்லை.

எமர்ஜென்சியைக் கொண்டுவந்த காங்கிரஸுடன் தி.மு.க. கூட்டணியா என்று கேட்கும் பழனிசாமி, அந்த எமர்ஜென்சி காலத்தில் கோலிக்குண்டு விளையாடிக் கொண்டிருந்தவர். தி.மு.க. தலைவரும் நிர்வாகிகளும் அந்த எமர்ஜென்சியை, துணிந்து எதிர்த்து நின்ற முத்தமிழறிஞர் கலைஞரின் ஆணையை ஏற்று நின்று, மிசா சிறைவாசத்தை எதிர்கொண்டவர்கள். பழனிசாமி தனது கம்பெனியாகக் கருதும் அ.தி.மு.க.வை நிறுவியவரான எம்.ஜி.ஆர்., எமர்ஜென்சிக்கு பயந்து, தன் கட்சியின் பெயரை அ.இ.அ.தி.மு.க. என்று மாற்றிக் கொண்டவர். கட்சியின் பெயரையும் கட்சியின் கொள்கையையும் மாற்றாமல் உறுதியாக நின்று, எமர்ஜென்சி கால அடக்கு முறைகளை எதிர்கொண்டவர் கலைஞர். ‘ஆதரித்தாலும் எதிர்த்தாலும் அதில் உறுதியாக இருப்பவர் கலைஞர்’ என்று அந்த எமர்ஜென்சியைக் கொண்டுவந்த இந்திரா காந்தி அம்மையாரே வெளிப்படையாகச் சொன்னதுடன், பின்னர், சென்னைக் கடற்கரையில் தி.மு.க. நடத்திய பொதுக் கூட்டத்தில், எமர்ஜென்சியைக் கொண்டு வந்ததற்காகப் பொதுமக்களிடம் வருத்தத்தையும் தெரிவித்தார். பழனிசாமிக்கு தி.மு.க.வின் வரலாறு மட்டுமல்ல, அ.தி.மு.க.வின் வரலாறும் தெரியாது. ஏனெனில், அவர் இன்று வரை செய்து வருவது வியாபாரம். முன்பு வெல்ல மூட்டை-அரிசி மூட்டையாக இருந்தது, இப்போது டெல்லிக்குச் சுமந்து செல்லும் அரசியல் மூட்டையாக உள்ளது.

50 ஆண்டுகளுக்கு முந்தைய எமர்ஜென்சி பற்றி எவரோ எழுதிக்கொடுத்ததை வைத்து உளறிய பழனிசாமியால், போன மாதம் வரை ‘துரோகி’ என்று புறக்கணிக்கப்பட்ட டி.டி.வி.தினகரன், இப்போது அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில், எடப்பாடி பழனிசாமிக்குச் சரிசமமாக உட்கார்ந்தது என்ன வகை அரசியல்? நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியாது என்று பழனிசாமியை இகழ்ந்த அன்புமணியும் அதே அ.தி.மு.க. அலுவலகத்தில் சமமாக உட்கார்ந்தது எப்படி? டெல்லி கட்டளை அப்படி.

அமித்ஷாவால் இயக்கப்படும் அ.தி.மு.க.வின் கிளை அலுவலகமாகத் தன் சொந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தை மாற்றிவிட்ட பழனிசாமிக்கு, ஒவ்வொரு தோழமைக் கட்சியுடனும் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தி, ஜனநாயகபூர்வமாகச் செயல்படும், தி.மு.க.வின் அணுகுமுறையை ஒருபோதும் கடைப்பிடிக்க முடியாது. அடிமைகள் எப்படிச் சொந்தமாக முடிவெடுப்பார்கள்?

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### 45 பேர் வெற்றி!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலுக்கு 90 வேட்பாளர்களை நிறுத்தினார், வேட்பாளர் தேர்வுக்குழுத் தலைவர் கலைஞர். “அகலக்கால் வைக்க வேண்டாம்” என்றார் பேரறிஞர் அண்ணா. “நிச்சயம் 40-க்கு மேல் வெற்றிபெறுவோம்” என்றார் கலைஞர். 45 பேர் வெற்றிபெற்று, சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900